# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் : 17:2

2015

- காலத்தின் கதவுகள்
- உணர்வுப் பாலம்
- நான் விதை மட்டுமல்ல...
- பெண்கள் வாழ்வின் வரலாற்றை...
- வானம், நான்கு சுவர்களுக்குள்
- என் செல்வமே
- 1990ஆம் ஆண்டு...
- இனங்கள் இணைந்து...
- பெண்நிலைவாதமும்...
- மலையகத்துப் பாடல்...
- தொழில் துறைக் கண்காட்சியும்...
- பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களால்...
- பாலியல் வன்முறைகளுக்கு...
- வேட்பாளர் நியமனத்தில்...

**"விழுந்து கிடக்கும் விதைகளாய்
பரந்து கிடக்கும் பெண்களின்
கதைகளை விதைப்போம் –இனி வரும்
மானிடம் நிழல் பெற."**

ஆசிரியை

# - காலத்தின் கதவுகள் -

மூச்சுக்காத்தாய் நான் மிதந்தேன்
நடப்பது எல்லாம் பாத்திருந்தேன்
சாட்சியாக வந்தேன் இங்கு நானே...

கதைகள் காவி காற்றாய் வருவேன்
காற்றின் வடிவில் உயிர்கள் தொடுவேன்
காற்றின் கதையின் உண்மை தெரிவீர் நீரே

16.06.2015 அன்று திருச்செந்தூர் முருகன் கோயிலின் அருகில் உள்ள வெறும் வளவினுள் இருந்த பெரிய "கோணாமாணா புளிய மர" நிழலின் கீழ் வாழ்வின் கடந்தபோன உண்மை நிகழ்வை நிகழ்கால நிகழ்வாய் பார்த்துச் செல்ல பெண்கள் சிறுவர்கள் குழுமியிருந்தனர்.

நாடகம் சொல்வது நடைமுறைக்குச் சாத்தியமாகும் விடயங்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல பெண்ணிய வாழ்வியல் நாடக அளிக்கைகளை பரவாலாக தமது கலை மொழிகளினூடாக சமூகத்திற்குள் பேசி வரும் சூரியாவின் கலாசாரகுழு குழுவினர் தமது படைப்புக்களில் ஒன்றான "கடல் வரைந்த கதை" நாடகத்தை பகிர்ந்தனர்.

நாடக முடிவில் பெண்கள் பேசத் தொடங்கினர்... தாம் கடந்த வாழ்வில் அனுபவித்த விடயத்தை தற்போது பார்க்கையில் மீண்டும் பழைய காலத்திற்குள் சென்றதாகவும், கட்டாயம் வெவ்வேறு இடங்களில் இந்த நாடகத்தை போட வேண்டும் எனவும், நாவலடியில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது திராய்மடுவில் வசிக்கும் மக்களும் நீண்டகாலமாய் திராய்மடுவில் வசிக்கும் மக்களும் ஒன்றிணைந்து வாழ விரும்புவதையும் அவர்கள் பேசத் தொடங்கினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுப் பாலம்

யுத்தம் முடிவடைந்த நிலையிலும் யுத்தம் விட்டுச் சென்ற வலிகள் இன்னும் முடியவில்லை. யுத்தத்தின் பின் இருக்கும் வலி என்பது தீராதநோய் போன்றது. அவ் வலிகளே மீண்டும் ஒரு கட்டத்தில் புரையோடும் வடுவாய் மாறும். ஆகவே சுகப்படுத்தாவிடில் இன,மத,பேதம் கடந்து மொத்தத்தில் அழிவையே தரும்.

சுகப்படுத்தும் மருந்தாய் நாம் இன்று கையில் ஏந்திச் செல்வது மானிட உணர்வுகளையேதான். இதற்காக இன்று இணைந்து நடந்து உறவைக் கட்டியெழுப்பும் தமிழ் முஸ்லிம் சகோதரிகளுடன் சிங்களச் சகோதரிகளும் இணைந்து நடக்கவேண்டிய அவசியத்தைக் தன் அனுபவத்தின் ஊடாகத் தருகிறார் சகோதரி சுமிகா...

"யுத்தத்தின் பின் தமிழ் பெண்கள், சிங்களப் பெண்கள் வெவ்வேறான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டுள்ளார்கள். சுனாமிக்குப் பின் இருந்த சிறந்த தொடர்பு தற்போது இல்லை. நாம் வேலை செய்யும் கிராமங்களில் உள்ள சிங்களப் பெண்களுக்கு தமிழ் பெண்கள் அனுபவிக்கும் பிரச்சனைகள் தெரியாது. தற்போதைய சூழல் நன்றாய் இருந்தாலும் இச் சூழல் மாறலாம்.

ஆகவே உறவுகளைக் கட்டியெழுப்பல் வேண்டும். நாம் இனங்களுக்கிடையேயான நல்லுறவை கட்டியெழுப்பும் நடவடிக்கையை தற்போது ஆரம்பிக்க வேண்டும். பெண்கள் என்ற அடிப்படையில் பெண்களுக் கிடையேயான தொடர்புகளை ஏற்படுத்தலாம். கருத்துக்களைப் பகிரவேண்டும். சிங்களத்தில் இருப்பது தமிழுக்கும் தமிழில் இருப்பது சிங்களத்திற்கும் மொழி பெயர்ப்பு செய்து வெளியீடுகள் செய்யலாம். நாம் முகம் கொடுக்கும் அரசியல் அழுத்தங்களை பெண்கள் கதைகள் ஊடாக எமது அனுபவங்களின் ஊடாகவும் கையாளலாம். தமிழ் சிங்கள, முஸ்லிம் பெண்கள் இணைவதன் ஊடாக நாம் நம் வரலாற்றை எழுத வேண்டும்."

# நான் விதை மட்டுமல்ல...

"கடந்த மாதத்தில் செங்கலடி பிரதேச செயலகத்தில் "யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு பதியிறாங்களாம்" என்று கேள்விப்பட்டு நானும் பதறியடித்துக் கொண்டு ஓடினேன். (ஏனெனில் உயிரிழப்பு நிதியும், வீட்டுக் கடனுக்கு 10 தகரமும்தான் நான் பெற்றுக் கொண்ட உதவியே தவிர வேறெதுவுமில்லை.)



மேல்மாடி அறை கதிரைகளில் பல பெண்கள் அமர்ந்திருந்தார்கள். இரண்டு பெண் பிள்ளைகள் பதிந்து கொண்டிருந்தார்கள். நம்பரும் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு பிள்ள கூறினாள் "யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்களைத்தான் நாங்கள் பதிகிறோம் மற்ற ஆக்கள் இருந்தா போங்க" என்றாள். இடங்கள் காலியாகின. சிறிது நேரத்தில் 5,6 பேர் இருந்தார்கள். எனக்கும் இடம் ஒன்றும் நம்பரும் கிடைத்தது.

நம்பர் கூப்பிட நானும் போனேன். எல்லா விபரத்தையும் கேட்டு குறித்துக் கொண்ட அந்தப் பிள்ளை வயதைக் கூறியதும், "50 வயதிற்கு மேல் நாங்கள் உதவி செய்ய மாட்டோம்" என்று கூறினாள்.

படபடத்த இதயத்தை ஏற்றுக்கொண்டு பட்டென்று பொங்கிய வியர்வையை துடைத்தபடி வெளியேறினேன். என்ன செய்ய...,

எனக்கு நெற்றிக் கண் இருந்திருந்தால் அவளை எச்சரிக்கை செய்திருப்பேன். "பாதிக்கப்பட்ட" என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இதயங்களை உனது சாதிக்காத சொற்களால் கீறிக் கிழிக்காதே என்று. நான் விதை மட்டுமல்ல ஏணி என்று...

அவளுக்குத் தெரியுமா 50 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் காலத்தால் அழியாத வாழ்தலின் வெற்றிகள்? அப் பெண்களின் ஒருத்தியாய் நான் கேட்கிறேன்,

இப் பெண்கள் உண்பதில்லையா? உறங்குவதில்லையா? உடுப்பதில்லையா? அவளைச் சார்ந்து வாழும் உயிர்களை வாழ வழி காட்டி ஆதரவாக இன்னும் இருக்கவில்லையா? சின்னா பின்னமாக்கப்பட்ட இச் சமூகத்தை கட்டிக்காக்கவில்லையா? நீங்கள் பறித்தெடுத்த திருப்பித்தராத எங்கள் உறவுகளை இன்றும் தேடித்திரியவில்லையா?

பாவம் இந்தப் பிள்ளைக்குத் தெரியுமா, சூனியத்திலிருந்து எழுந்த எங்கள் எழுதலுக்கான போராட்டத்தின் பெறுமதி பற்றி. எங்கள் வாழ்க்கையின் அர்த்தம் பற்றி, கடந்து சென்ற காலங்களின் காயங்கள் பற்றி, அல்லது சும்மா இருந்த என்னைக் கூப்பிட்டு சீண்டியதால் நான் அடையும் ஆதங்கம் பற்றி...

– சாரதா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வாழ்வின் வரலாற்றை ஆவணப்படுத்தல்





ஒவ்வொரு பெண்ணும் அவள் கதையும் வரலாறே பெண்களுக்கு பல சவால்கள் அவர்கள் வாழ்க்கையில் உள்ளது.

சவால்களை எதிர் கொள்ள அதிக வேலை செய்து கொண்டுள்ளார்கள். சிலநேரங்களில் சூரியாவின் உதவியை நாடுகிறார்கள். பலர் தாங்களாக இதில் இருந்து விடுபட முயற்சியை மேற் கொள்கிறார்கள்.



சவால்களுக்கான போராட்டம் தொடர்ச்சியாக நடந்து கொண்டே உள்ளது. போராட்டத்தில் புதிதாய் இணையும் பெண்களுக்கு முன்னர் வந்த பெண்களின் அனுபவம் பாடமாய் பயன் தருகின்றது.

நாங்கள் ஒவ்வொரு பெண்ணினது வாழ்வையும் அவர்கள் வாழ்வின் அனுபவத்தையும் அதன் பெறுமதியையும் உணர்கிறோம்.

எனினும் பெண்களுக்கு தங்கள் வாழ்வை அதன் பெறுமதியை சிந்தித்துப் பார்க்கவும் பகிர்ந்து கொள்ளவும் நேரம் இருப்பதில்லை.

சந்தித்துக் கதைப்பதற்கும் யாரும் இருப்பதில்லை மற்றவர்கள் ஆயத்தமாகவும் இல்லை கதை கேட்க வாழ்வை பகிர்ந்து கொள்ள விரும்பினாலும் யாரிடம் பகிர்ந்து கொள்வதென்பது கேள்வி. ஏனெனில் எல்லோருடனும் எல்லா இடத்திலும் கதைக்க முடியாது பாதுகாப்பான இடம் தேவை.

**பெண்களின் வாழ்க்கை ஒருபாடம்.**

எமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக வீட்டுச் சாமான்களை சேர்த்து வேறு இடத்தில் வைக்கின்றோம், காசு சேமித்து வைக்கின்றோம், பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக மரங்கள் நட்டு வைக்கின்றோம், எமது சொந்த வாழ்வை சொந்த அனுபவங்களை எங்கே சேமித்து வைப்பது?

“அனேகமாக பிள்ளைகளுக்கு தாய்மாரின் வரலாறுகள் தெரியாது”

எவ்வாறு பிள்ளைகளிடம் சொல்வது? தாய்மாருக்கு பிள்ளைகளிடம் நேரடியாகச் சொல்லத் தயக்கம். ஏனென்றால் பிள்ளைகள் தாய்மாரை எவ்வாறு விளங்கிக் கொள்வர்?

ஆகவே எதிர்கால சந்ததிக்கு கொடுப்பது எவ்வாறு என நாம் சிந்திக்கவேண்டியுள்ளது. பெண்களது வாழ்வின் கதைகள் எரிக்கப்படும் குப்பைகள் அல்ல.

அவை விதைகள் பதியம் வைக்கும் ஒரு விதை நாளை ஒரு விதையாய் மட்டும் நமக்குக் கிடைப்பதில்லை “அது ஒரு மரமாய் மாறும்”

பெண்கள் வாழ்வின் கதைகள் பாதுகாப்பான இடத்தில் எதிர்கால சந்ததிக்காய் ஆவணப்படுத்தல் வேண்டும்.

2012இல் இருந்து தொடங்கப்பட்ட எமது ஆவணப்படுத்தல்கள் வேலைகள். சிறிய குழுவாக, சிறிய பகுதிகளாக, பலவிதமான குழுக்களாக, சந்திப்புக்கள் நடக்கின்றன. பரிசோதனைகள் நடக்கின்றன.

சமூகம் இவர்கள் வாழ்வை இப்போது ஏற்றுக்கொள்ளாதிருக்கலாம். ஆனால் எதிர்காலம் இவர்கள் வாழ்வின் அனுபவப் பயணத்தை சிறந்த பாடமாய் ஏற்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம், நான்கு சுவர்களுக்குள்




"இவர் வந்துருவாரோ என்ற பயத்தில பின்னேரம் வேல விட்டு வந்து அவசரமாக சமைச்சி கொதிக்கக் கொதிக்க கொடுத்து பக்கத்து வீட்டுக்கு பிள்ளைகள நித்திரைக்குக் கூட்டித்துபோறன். சரியான கஸ்டம். அப்படி இருந்தும் நேற்று வந்தவர் உடுப்பையெல்லாம் தண்ணிக்குள்ள எறிஞ்சி கால திரும்ப முறிச்சுப் போட்டதால என்னால நடக்கவும் முடியல்ல". உடலிலும் பெலன் இல்ல. இன்றைக்கு வேலைக்கும் போகல்ல. ஆனா என்ன வேண்டுமானாலும் பிள்ளைகள் என்னட்டதான் கேட்கும்.

"என்ர பிரச்சன எனக்குத்தான் முழுசாத் தெரியும். பொலிசுக்கு குடும்பப் பிரச்சன" குடும்பத்துக்குள்ள வாற சண்டதானே..என்டு சிந்தன.. என்ன இவர் பத்த வைச்சே 10 வருசத்துக்கு மேல. பயங்கரமா இப்படிக் காலக்கைய முறிச்சி போட்டார் உடுப்பெல்லாம் எரிச்சிப் போட்டார் என்று பொலிசில் "என்றி" போட்டா பொலிஸ் சொல்லுது "அவரக் கண்டா எங்களுக்கு கோள் பண்ணுங்க நாங்க வந்து பிடிக்கம்" என்று. என்னட்ட என்ன ஜீப்பும் துவக்கும் இருக்கா இவரப் பிடிச்சி பொலிசில கொடுக்க

வீட்டுக்குப் பின்னால ஆறு. இவருக்குத் தைரியம் பொலிஸ் வந்தா ஆத்தில பாயலாம் என்று. அப்படித்தான் பாயிறார். ஒருதரம் ஜட்ஜ்(நீதிபதி) இவரிட்ட கேட்டார் "உனக்கு உன்ர மேல எத்தன கேஸ் இருக்கு என்று தெரியுமா" என்று. எனக்கு அடிச்சகேஸ், மகளுக்கு அடிச்சகேஸ், தாவரிப்புக் கேஸ், இப்ப புதிசா குடும்பவன்முறைச் சட்டத்தில ஒருகேஸ், (Domestic violence act) இப்படிப் பல..

அவருக்கு அதப்பத்தி ஒன்றும் தெரியாது எங்கள அடிக்கணும். அதுமட்டும்தான் தெரியும். எங்களிட்ட சொல்லுவார் எனக்குப் பொலிஸ் புடிச்சாப் பயம் இல்ல "மணியடிச்சா சோறு" என்று.

பிள்ளைகளயாவது ஏதாவது இல்லங்களில் தங்க வைச்சி படிப்பிக்கலாம் என்றா அதுவும் ஏலாது. **என்ர கதய யாரும் பொறுமையுடன் முழுசாக் கேட்காத படியா தற்காலிக நிவாரணியோட சுவரில் அறைந்த பந்தாய் மீண்டும் மீண்டும் அடிபட்டுக்கொண்டே இருக்கன் நீண்ட காலமாய்.**

---

வித்தியா என் செல்லமே
காட்டிலே தூக்கி எறியப்பட்டவளே!
சைக்கிளுடன் வெள்ளைநிற
சீருடையில் காமப்பார்வை
எப்படி அம்மா உன்மீது வீழ்ந்தது?
அழகான உனது முகம்
கறுப்பாய்
குறுகுறுக்கும் உன் விழிகள்

ஏன் ஒரு தங்கையாக
அவர்களால் எண்ண முடியாது
போனது..?

எல்லாம் போதையும், புகையும்
தந்த வெறியா...?

நீண்டகால வைராக்கியமும்
குரோதமும், கோபமும்
நீ பலியாக காரணமானாயோ...?




ஓ! வித்தியா வாழை இளங்
குருத்தாய் வளர்ந்தவளே!

இணையத்திலே உன் "கோலம்"
காட்டிட இயக்கினார் கேமரா என்றால்
அன்பு, பரிவு, கருணை, கலாசாரம்
சகோதர உறவுமுறைகள்
இவைகளுக்கெல்லாம் என்ன
நடந்துள்ளது எம் சமூகத்தில்....

வித்தியா! உலகை ஓர்கணம்
விழிக்கச் செய்பவளே

நீ இறந்ததால் உலகமே அழுகிறது.

ஓராயிரம் கரங்களுக்கும் மேல்
காத்திருக்கின்றன
சரியான நீதியை வழங்கிட

**மொழிவரதன் மகாலிங்கம்**
கொட்டகலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இக் காலப் பகுதி வலி மிகுந்த காலமாகும். உறவைப் பிரிந்து உயிர் வாழ்தல் என்பது எனினும் அவ்வாறான உயிர் வாழ்தல்கள்தான் பலர் வாழ்வில் ஒவ்வொருநாளும் கடந்து கொண்டு செல்கின்றது. கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு மேலாகிவிட்டது பல இடங்களிலும் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக மனிதர்களால் அழைத்துச் செல்லப்பட்டு மனிதக் கூட்டங்களுக்குள் தனிமைப்படுத்தப்பட்டு தமது உறவுகளையொத்த அடையாளத்துடன் கூடிய மனிதர்களால் உயிர்பறிக்கப்பட்டு...காத்தான்குடி பள்ளிவாசல், சத்துருக் கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில், குருக்கள் மடம், கிழக்குப் பல்கலைக்கழக நலன்புரி முகாம், புதுக்குடியிருப்பு, சவுக்கடி இவ்வாறு தொடரும் மானிடம் அழிக்கப்பட்ட இடங்கள். இனங்களின் இதயத்தில் வலிதீரா வடுக்களை ஏற்படுத்திய சம்பவங்கள் இவை. எனினும் இனி ஒரு முறை இவை வேண்டாம் என்பதே அனைவரதும் பிரார்த்தனையாகும்.

# 1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நிகழ்ந்த பெரியளவிலான படுகொலைகள், காணாமல் போதல்கள், இடப்பெயர்வுகள் முதலியவற்றின் 25வது ஆண்டு தொடர்பான அறிக்கை

**25** வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டமானது இலங்கையின் நீண்ட கால இனப் பகைமை வரலாற்றிலேயே குரூரமான சில வன்முறைகளை அனுபவித்தது. பெரியளவிலான தொடர் படுகொலைகள் காணாமற்போதல்கள், சொத்துக்களின் அழிவு, இழப்பு, கட்டாய இடப்பெயர்வுகள் ஆகியவை 1990 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இடம்பெற்றன. காத்தான்குடி, சத்துருக்கெண்டான், ஏறாவூர், குருக்கல்மடம், வந்தாறுமூலை, சித்தாண்டி முதலிய இடங்களில் நிகழ்ந்த கோரக்கொலைகள், காணமற் போதல்கள் உட்பட இவை இன்னும் பலவாகும். இத்தகைய கொடூரச் செயல்கள் சிங்கள, தமிழ், முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த ஆயுததாரிகளால் செய்யப்பட்டன. வன்முறைகளுக்கு உள்ளாகியோர் குடும்பங்களுக்கு சொல்லொனாத் துயரங்களை ஏற்படுத்தின. தமது நேசத்திற்குரியவர்களின் கதி பற்றிய தகவல் குறைவும், வன்முறை, இழப்புப்பற்றிய அங்கீகாரம் இன்மையும் இன்றுவரை வேதனையை தொடரச் செய்கின்றன.

25வருடங்களுக்கு முன்னரான வன்முறைகள் மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இன்று இச் சமூகங்கள் வெளிப்படையான பிணக்குகள் இன்றி அருகருகாக வாழ்ந்த போதிலும் ஆறாத ஆழமான காயங்கள், நம்பிக்கையும், நட்பும் மீள உருவாதலைத் தடுக்கின்றன. கடந்தகால அட்டூழியங்களை நேர்மையுடன் ஏற்றுக்கொள்ளுதலும் (எமது சமூகத்தின் பெயரால் நிகழ்ந்தவற்றை) இவ் வன்முறையால் வேதனைப்படுவோரின் கதைகளைக் கேட்பதற்கு தயாராயிருப்பதும் அவநம்பிக்கை, கோபம் ஆகியவற்றைக் குறைப்பதற்கான படிகள் ஆகும்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நிகழ்ந்த மிக மோசமான நிகழ்வுகளை நினைவு கூறுமாறும் அவை எவ்வாறு சகல சமூகங்களையும் பாதித்தன என்பதை உணருமாறும் கோருகிறோம். பாதிக்கப்பட்டு வேதனையுற்றோர்களை விசேடமாக உங்கள் சமூகத்திற்குப் புறம்பேயுள்ளவர்களை புரிந்துணர்வுடனும் கருணையுடனும் நோக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ் வன்முறைகளிலிருந்து தப்பிப் பிழைத்தோர் பக்கம் நின்றாலும் தமது வேதனையை மேலும் பிளவுகளையும் இணக்கமின்மையையும் மட்டக்களப்பின் சமூகங்களிடையே ஏற்படுத்தப் பயன்படுத்துவோருக்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வருடம் ஜூலை 25ஆம் திகதி மட்டக்களப்பு சமாதானக் குழுவினரும் நண்பர்களும் 1990 ஆண்டில் நிகழ்ந்த கண்மூடித்தனமான வன்முறையில் இறந்தவர்களையும், வன்முறைகளின் பாதிப்புகளுடன் வாழ்பவர்களையும் நினைவுகூர்வதற்காக ஒன்று சேர்ந்தனர். கடந்தகாலம் பற்றிய ஆழ்ந்த துயரத்துடனும் ஆனால் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடனும் இதனை நாம் செய்தோம்.

மட்டக்களப்பு சமாதானக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் நினைவு கூருகிறோம்"

1990 – 2015 (25 வருடம்)

**சம்பவம்**

சுற்றி வளைப்பின்போது கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனவர்கள்

**எண்ணிக்கை**

184 நபர்கள்

**காலம்**

09.09.1990

**இடம்**

கொக்குவில், சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த மக்கள். சுற்றிவளைத்து கொண்டு செல்லப்பட்டது – சத்துருக்கொண்டான் இராணுவ முகாம் (Boys town)

ஆறுதலையும் சுகப்படுத்தலையும் எமக்களிப்பதற்காக உண்மையைத் தேடும் எமது பயணத்தில் தாங்களும் எம்முடன் இணைய வேண்டும் என்பதை நாம் விரும்புகிறோம்.

**நாம் வேண்டுவதெல்லாம்**
**புதைகுழி அல்ல**
**புன்னகை மனிதர்களையே.**

காணாமல் போனவர்களின் உறவுகளும் நண்பர்களும்
05.09.2015

**எண்ணிக்கை**

158 நபர்கள்

**காலம்**

05.09.1990

**இடம்**

கிழக்குப் பல்கலைக்கழக நலன்புரி முகாம்.

**සිහිකරමු ....**

*1990 - 2015 (25 [illegible])*

[illegible]

158

1990 සැප්තැම්බර් 05

[illegible]

"[illegible]"

[illegible]
2015 සැප්තැම්බර් 05

# இனங்கள் இணைந்து இன்பமாய் வாழ்வோம்



**மதங்கள் கடந்தும் மனிதர்களாய் சிந்திப்போம்....**
**வேற்றுமைகளைந்து ஒற்றுமையில் வெற்றி காண்போம்,..**
**முரண்பாடுகளை நம்பிக்கைகளால் வென்றெடுப்போம்...**
**பிரித்தாள நினைப்போரை பின்தள்ளி மகத்தான நல்லுறவை நாளும் வளர்ப்போம்...**

ஒன்றாக நாமிருந்தால்... - சுகம்
எல்லாமே கூடி வரும்..
இனபேதங்கள் களைந்துவிட்டால் - பெரும்
இன்பங்கள் தேடி வரும்..

சண்டைகள் பல இருந்தும்...
சாதிமத மொழி இருந்தும்
ஒன்றுபட மனமில்லையோ - தோழி
உறவுகள் நாமில்லையோ!!

வேற்றுமைகள் இங்கிருந்தும்
வேறு நிற உடலிருந்தும் - ஓடும்
ரெத்தம் ஒன்றில்லையோ
உண்மை இது புரியலியோ!!!....-

வாழுமிடம் மாறிடலாம்...
ஊரின் பெயர் மாறிடலாம்
நட்பு என்றும் ஒன்றல்லவோ - அதை
தலை நிமிர்ந்து சொல்லிடுவோம்..!!!
தாண்டி வந்த பாதைகளோ ...
தடை நிறைந்த பள்ளங்களே...

மீண்டுமொரு பிரிவு வந்தால்
தாங்கிடுமோ எம் இதயம் !!!

பிரித்தாள நினைப்போரை
வெறுத்தேதான் ஒதுக்கிடுவோம்
வேண்டி நிற்கும் நல்லுறவை
விரைந்தேதான் வளர்த்திடுவோம்,,,,!!!

வன்முறைகள் களைந்திடுவோம்....
நல்லிணக்கம் கண்டிடுவோம்
அன்பு ஒன்றே உயர்ந்தவழி- என்றும்
உன்னைத் தேடும் எந்தன் விழி....

வானம் ஒன்று பூமி ஒன்று... - நாம்
வணங்கும் இறை என்றும் ஒன்று...
சாந்தி வழிநிதமும் நின்றே..
சத்தியத்தை வாழச் செய்வோம்...
பெண்ணினத்தில் பிறந்ததற்காய்...
பெருமைப்படும் நாள் இதல்லோ...
புறப்படுவாய் சோதரியே,,,
புதுயுகம் படைத்திடுவோம்..

**முஸ்லிம் தமிழ் சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்நிலைவாதமும் சமத்துவமும் நிலைத்து நிற்கும் உண்மைகள்.

“நான் றொமிலா எனது வயது 35. நான் சூரியாவில் முச்சக்கர வண்டி சாரதியாக வேலை செய்கின்றேன். ஒரு நாள் மாலை நான் வேலை முடிந்து வீட்டிற்குச் சென்று எனது அன்றாட மாலை வேலைகளை செய்து கொண்டிருக்கும்போது எனது அம்மாவின் சகோதரி வீட்டிற்கு வந்து என்னிடம் கூறினார், “உனது அண்ணாவின் மகள் பெரிய பிள்ளை ஆகிவிட்டாள் அவளுக்கு நீதான் அத்தை. தண்ணி வாக்க வேண்டும் உடனே வா” என்று. நானும் சரி என்று கூறிவிட்டு அங்கே செல்லும்போது எனக்கு ஒரு யோசனை வந்தது. “மூத்தது ஆண் பிள்ளை பெற்றவர்கள்தான் தண்ணி வாக்க வேண்டும்” என்று கதைப்பார்களே என. ஏனென்றால் எனக்கு மூத்த பிள்ளையாய் இருப்பது ஆண் பிள்ளை என்றாலும் முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்து இறந்திருந்தது.

ஆகவே முதலில் பெண் குழந்தைதானே பெற்றேன். இதை சித்திக்கு ஞாபகப்படுத்தி அவர் கருத்தைப் பெறாமல் நான் தண்ணி வாப்பது சரியில்லை என்று எனது மனம் உறுத்தத் தொடங்கியது. உடனே நான் சென்று சித்தியிடம் என் சிந்தனையைக் கூறி “நமது அத்தையிடம் சொல்லி தண்ணி வார்ப்போம் அவக்குத்தான் முதலில் ஆண் குழந்தை பிறந்தது” என்றேன். இதையே வேறு இரு பெண்களும் சித்தியிடம் கூறியிருந்தார்கள்.

அப்போது அவர் கூறினார் “அவள் என்ன பிள்ளை பெற்றிருந்தாலும் பரவாயில்லை, என்ன பிரச்சனை வந்தாலும் அதை எதிர்த்து என்னால் வாழ முடியும் ஏனென்றால் நீ பிள்ளைகளை நன்றாகப் படிப்பித்து எந்தப் பிரச்சனை வந்தாலும் தைரியமாய் முகம் கொடுத்து ஊரில் நல்லாய் வாழ்கிறாய். அதனால் என்ன பிள்ளை இருந்தாலும் பரவாயில்லை நீதான் தண்ணி வாக்க வேண்டும், எனது மகனும் இதைத்தான் கூறினான் “இவளைப் போல் நல்ல துணிச்சலான பெண்ணாய் இவள் வரவேண்டும்” என்று. பிறகு என்ன நான் கடவுளை வேண்டி விட்டு தண்ணியை வாத்தேன்.



“பழைய கால மூட நம்பிக்கைகளை கேட்டு பெண்பிள்ளை பெற்றால் தண்ணி வாக்கக் கூடா என்பதெல்லாம் பொய். ஏன் என்றால் எல்லா பெண்பிள்ளை பெற்ற தாய்க்கும் ஒரு ஆண்பிள்ளை பெற்ற தாய்தான் தண்ணி வாத்திருப்பார். எனக்கும் அப்படித்தான். ஆக எனக்கு எப்படி முதலில் பெண் குழந்தை பிறந்தது?”

## இன்னும் நாங்கள் சுற்றி சுற்றி ஒரே புள்ளியில் நிற்கின்றோமே எனும் ஆதங்கமும் வேதனையும் மனதைச் சுடுகிறது....?

அரச, அரச சார்பற்ற அமைப்புக்களால் இன்று பால்நிலை சமத்துவம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சர்வதேச பெண்கள் தினங்கள், பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான தினங்கள் அனுட்டிக்கப் படுவதுடன் பெண்கள் சிறுமிகளுக்கெதிராக நடைபெறும் உரிமை மறுப்பு, வன்முறைச் சம்பவங்களுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. (பெண்களுக்கு இப்படி நடக்கும் வன்முறைகளுக்கும் பெண்கள் வந்து நிற்கிறோம். பெண்கள் தொடர்பான சர்வதேச நிகழ்வுகளுக்கும் பெண்களே வந்து நிற்கிறோம். கடந்த காலங்களில் இவ்வாறான நிகழ்வுகளில் பார்த்த அதே பெண்களில் அனேகரை தொடர்ந்தும் தொடர்ந்தும் காண்கிறோம்.)

இவ்வாறான நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பெண்ணுடன் உரையாடியபோது அப் பெண் எவ்வாறு இந் நிகழ்விற்கு வருவதற்கு தன்னை தயார்படுத்தினார் என்பதை உணரக் கூடியதாய் இருந்தது, அன்று காலை அவர் வீட்டில் நடந்த கலந்துரையாடலில் இருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் - எங்கு போகிறாய்?
மனைவி - நிறுவனத்திற்கு. (கூடுதலாக பெண்கள் நிறுவனங்களாகவே இருந்தன.)
கணவன் - ஏன்?
மனைவி - வித்தியாவிற்கு நடந்த கொடுமைக்கு ஆர்ப்பாட்டம் செய்ய
கணவன் - பகலைக்கு சமச்சித்தியா?
மனைவி - நேற்றே மீன் வேண்டிவைச்சி, இரவு மரக்கறி எல்லாம் வெட்டி வைச்சனான். அதால காலையில சமைச்சித்தன்.
கணவன் - எத்தின மணிக்கு ஆர்ப்பாட்டம் முடியுது?
மனைவி - தம்பிக்கு பள்ளி விட முந்தி சொல்லிப் போட்டென்டாவது வந்திருவன் சாப்பாடு போட்டுத் தாரத்துக்கு.

இதைப்போன்றதே அண்மையில் கிழக்குப் பகுதியில் காணக்கிடைத்த மரணவீட்டில் நிகழ்வொன்று.

இறந்த நாளில் அல்லது அடக்கம் செய்த நாளில் இருந்து தொடர்ந்து எட்டு இரவுகள் கண்விழிப்பார்கள். கண்விழிப்பதற்காக ஆண்கள் வருவார்கள். அவர்கள் கூடுதலாக "காட்ஸ்" கூட்டம் விளையாடுவார்கள். அந்த வீட்டில் உள்ள பெண்கள் அன்று முழுவதும் வரும் சாப்பாட்டை பகிரல், தேநீர்க் கடையைவிட வேகமாகவும் அதிகமாகவும் தேநீர் தயாரித்தல், வழங்குதல், வீட்டிற்கு துக்கம் விசாரிக்க வருபவர்களுடன் கதைத்திருத்தல், வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல், உணவு சமைக்கும் பெரிய பெரிய பாத்திர ங்களை கழுவுதல் உணவு பற்றாவிட்டால் மீண்டும் உணவு தயாரித்தல், பகிரல் என கால் நிலத்தில் வைக்க முடியாதபடி ஓடிக்கொண்டே இருப்பார்கள்.

உடல் நொந்தாலும் இரவில் விளையாடும் ஆண்களுக்கு கண்விழித்து தேநீர், சிற்றுண்டிகள் தயாரித்து வழங்க வேண்டியுள்ளது. எனினும் துக்க வீட்டைச் சேர்ந்த ஆண்களோ வரும் ஆண்களுடன் சேர்ந்து விடியும் வரை :காட்ஸ்விளையாடுவதும் பகல் முழுவதும் கண் விழித்ததற்காகவும் இனி விழிப்பதற்காகவும் தூங்கிக் கொண்டும் இருப்பார்கள். வேதனை என்னவென்றால் ஒரு பெண்ணும் இதற்கு மறுப்புச் சொல்வதுமில்லை, சொல்வதற்கு இடமும் இல்லை, பக்கத்தில் பக்கத்தில் முனகிக் கொண்டு மற்றப் பெண்ணைப் பார்த்து வேலை சொல்லிக்கொண்டு குறை கூறிக்கொண்டு இருப்பார்கள். இந்த நிலைமை, கிராமத்தில் மட்டுமல்ல நகரத்திலும் நகரத்தை அண்டிய இடத்தில் மட்டுமல்ல பால்நிலைச் சமத்துவப் பயிற்சி எடுத்த, கொடுக்கும் பெண்கள், ஆண்கள் வீடுகளிலும் கூட...

இதை ஏன் சிந்திக்க வேண்டும்? ஏன் சொல்லவும் எழுதவும் வேண்டும்?

பெண்ணியம் என்பது வாழ்வை வன்முறையில் இருந்து விடுவிப்பது, பெண்களின் மன உடல் சுமைகளை வலிகளைத் தவிர்ப்பது, சந்தோசமான இலேசான சூழலை உருவாக்குவது, உரிமைகளைப் பேச வழிவகுப்பது, கௌரவத்தையும், பாதுகாப்பையும், பெற்றுக் கொடுப்பது, மனித உணர்வுகளைப் பேசுவது

இதற்காக எத்தனை வருடங்கள் பெண்களால் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இன்று எமக்கான வெளியை பெற்றுவிட்டோம் என திருப்திப்படுகையில் மீண்டும் நடைமுறை வாழ்க்கையில் இவ்வாறான சூழல்கள்

பெண்களின் இருப்பிற்கான இத்தனை வருடப் பெண்களின் போராட்டங்களை இழக்க முடியாது.

நாம் சிந்திக்க வேண்டியது மீண்டும் ஆழமாக- எவ்வாறு பெண்ணியம் நடைமுறை வாழ்வைச் சென்றடைவது அதன் புதிய வழி என்ன? யோசிக்க வேண்டியுள்ளது.

# மலையகத்துப் பாடல்

தோட்டக்காட்டு ஏழைப் பெண்கள் துயரம் கேளுங்கள்
அவங்க தொந்தரவ பாட்டுக்குள்ள படிச்சி பாருங்க
காலையில எழுந்திருப்பா அழகு சுந்தரி அவ அடுப்ப
மூட்டி ரொட்டி சுட நேரமாகாதா?
பெரட்டு தப்பு போயிருக்கும் பெரிய ரொட்டிய
அரும மக்களுக்கு பிச்சிதர நேரம் போதாதா?
(தோட்ட...)

வட்டமான அழகு சுந்தரி விரலைப் பாருங்க
அவை வரி வரியாய் வெடித்திருக்கும் வறுமை கேளுங்க
ஏறாத மலையெல்லாம் ஏறிடுவாங்க ஒரு
அஞ்சி நிமிசம் பிந்திப் போனா வெரட்டிடுவாங்க
(தோட்ட...)

எங்களோட துன்பமெல்லாம் தீர வேண்டுமே
நாம ஒன்று கூடி ஒற்றுமையா சேர வேண்டுமே
நம்மை ஏய்க்கும் ஐயா மாருங்க திருந்த வேண்டுமே
நாம ஒத்துமையா சேர்ந்திருந்தே மாத்த வேண்டுமே ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் துறைக் கண்காட்சியும் சமூகநாள் நிகழ்வும் 2015

**“இயந்திர உலகில் உற்பத்தியாளர்களின் புத்தாக்கச் சிந்தனை கொண்ட மாபெரும் கண்காட்சி -சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தாரின் காட்சிக் கூடமும் விற்பனையும்”**

உயர்கல்வி அமைச்சு மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் தொழில்நுட்ப ஆராய்ச்சி பிரிவின் கீழ் இயங்கும் மட்டக்களப்பு மாவட்ட “விதாதா வள நிலையங்கள், கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் 21ம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி திட்டத்துடன் (HETC) இணைந்து வேல்விசன் (World Vision) நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கான சிறந்த சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி பொருளாதாரத்தில் ஏற்றத்தினை உயர வைக்கும் பொருட்டு மாபெரும் கண்காட்சிகளும் கலைநிகழ்வுகளும் 2015, மே மாதம் 14ம், 15ம். 16ம், திகதிகளில் முற்பகல் 9மணி தொடக்கம் பிற்பகல் 9 மணிவரை இடம் பெற்றன.

இங்கு மட்டக்களப்பு மாவட்ட தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களின் காட்சிப்படுத்தலும் விற்பனையும் இடம் பெற்று புத்தாக்கப்படைப்புக்களுடன் இணைந்து தொழில் நுட்ப அறிவுரை விளக்கங்கள் வளங்கப்பட்டமையும், மட்டக்களப்பு மாவட்டம் அடங்கலாக மாவட்ட அரசதுறை திணைக்களங்கள், தனியார்துறை அமைப்புக்களின் கண்காட்சி காட்சிப்படுத்தப்பட்டதோடு பல சேவைகளும் வழங்கப்பட்டன.

இக்காட்சிப்படுத்தல்கள் விற்பனைகள் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து மட்டகளப்பு மாவட்ட பொருளாதார நிலையை மேலும் மேம்படுத்த முனையும் ஒன்றிணையும் தொனிப்பொருளில் இடம் பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட நுண்கலைத்துறையினரின் காட்சிக்கூடத்தின் ஒரு பகுதியாக “மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின்” காட்சிப்படுத்தல்களும் இடம் பெற்றன.

இங்கு இந்நிறுவனத்தின் வெளியீடுகள் காட்சிப்படுத்தப்பட்டன. புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்திமடல்கள் போன்றன உள்ளடங்கலாக அமைந்து இருந்ததோடு கருத்துரைகளும் இடம் பெற்றன. இங்கு பாடசாலை மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக கல்விசார், கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் போன்றோர் பங்கு கொண்டமையும் பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் காட்சிப்படுத்தல்கள் கிழக்குப் பல்கலைக்கழக வளாகச் சூழலுக்கு பெறுமதிசேர் பயன்களை வழங்கியதோடு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் “பெண்”சஞ்சிகைகள், செய்திமடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித்தனி அர்த்தப்புலத்தில் அமைந்தமை இதனைப் பார்வையிட்டவர்களின் கலந்துரையாடல்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் மூலம் அறிய முடிந்தது.

பெண்நிலை இலக்கியத்தையும் அதன் அடையாளத்தையும் ஊக்குவிக்க முயல்பவர்கள் முன்னுள்ள பாரிய கடமையாகவே இக் காட்சிப்படுத்தலும் விற்பனையும் அமைந்தது.

அந்தவகையில் பெண்களுடைய மொழி, படைப்பு, முறைமை, அடையாளம் ஆகியவை பற்றி இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. பெண் விடயம் பற்றியும் பெண்ணுடைய மொழி மூலமான ஆக்கங்கள் பொரும்பாலும் வாய் மொழியாக பேச்சுத் தளத்திலேயே வடிவம் கொள்கின்றன. இதனைப் புரிந்து கொண்டு அவற்றைப் பரவலாக்கவும் எழுத்துத் தளத்திற்குப் பேச்சை. வாய்மொழியை கொண்டு வரவும் வேண்டும். பெண்நிலை இலக்கியத்தையும் அதன் அடையாளத்தையும் ஊக்குவிக்க முயல்பவர்கள் பாரிய கடமையாகவே இக் காட்சிப்படுத்தலும் விற்பனையும் அமைந்தது.

நிலுஜா.ஜெ
கிழக்குப் பல்கலைக்கழகம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படும் பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான நீதி கோரும் நாடளாவிய பிரச்சாரம்

நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வரும் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அவர்களது குடியுரிமையையும் சுதந்திரத்தைக் குறைவுபடுத்துவதோடு இந்த நாட்டின் சமூக அபிவிருத்தியையையும் பாதிக்கும் ஒரு பாரிய பிரச்சனையாக உள்ளதை சுட்டிக் காட்டுகின்றோம்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களாகிய நாங்கள் இத்தகைய அறிக்கையிடப்பட்ட வன்முறைகளுக்கான சட்டநீதி கோரியும் பாலியல் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலான சமூகநீதி கோரியும் 2013ம் ஆண்டிலிருந்து இணைந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்தப் பயணத்தின் ஓர் பகுதியாக தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் நிகழ்த்தப்படும் வன்முறைகளுக்கான பதிலிறுப்புக்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம். உதாரணமாக, நாங்கள் கடந்த ஜீன் 1ம் திகதி (01.06.2015) புங்குடுதீவு மாணவிக்கான நீதியை முன்னிறுத்தி இதே போன்ற ஏனைய பெண்களுக்கானதுமான நீதியைக் கோரி நாடளாவிய ரீதியிலான பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. இது ஒரே நேரத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மொனராகலை, புத்தளம், கொழும்பு, நுவரெலியா, ஆகிய 11 மாவட்டங்களில் பெண்கள் அமைப்புக்கள், வலையமைப்புக்கள் போன்றவற்றுடன் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என நம்பும் மனித உரிமை அமைப்புக்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், தனிநபர்கள் போன்றவர்களால் நடாத்தப்பட்டது. நாடளாவிய ரீதியில் 2024 எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

எமது இந்த நீதியை நோக்கிய பயணத்தின் பல்வேறு செயற்பாடுகளின் ஒரு பகுதியாக நாங்கள் அனைவரும் சமத்துவமாகவும், நீதியுடனும், சுதந்திரமாகவும், வாழக்கூடிய சமூகங்களுக்கு அடித்தளம் அமைக்கும் வகையில் பொதுமக்களிடம் உறுதிமொழி பெறும் நிகழ்வும் ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகளற்ற சமூகங்கள் அமையக்கோரி ஒவ்வொரு தனிநபரும் கீழ்வரும் இரு உறுதிமொழியை எடுத்து கையெழுத்திட்டனர்.

1. பெண்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகளை (எங்களது நாட்டில், சமூகத்தில்) எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

2. பெண்களுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகளுக்கான நீதியை துரிதப்படுத்தக் கோருகிறோம்.

இதுவரை நாடளாவிய ரீதியில் மொத்தம் 3042 கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

எமது அடுத்த பிரச்சாரம் 07.07.2015 அன்று யாழ்ப்பாணத்தில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த நீதிகோரும் பயண செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. இதுவும் கடந்த 4 வருடங்களில் யாழ்ப்பாணத்தில் மட்டும் நிகழ்த்தப்பட்ட 16 பாலியல் வன்முறைகளுக்கான நீதி கோருவதாக அமைந்தது.

எங்களது இந்த நீதியை நோக்கிய பயணமானது பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான வன்முறைகளுக்கு நீதி கிடைக்கும் வரை தொடரும். எமது நாட்டில் பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள் நிகழாது தடுப்பதற்கு நாம் அனைவரும் பொறுப்புடமையுள்ளவர்கள்.

எனவே, வன்முறைகளற்ற வாழ்வுக்கான எங்களது நீதியை நோக்கிய பயணத்தில் அனைவரும் இணையுங்கள்!!!!!

**தொடர்புகளுக்கு :**

நீதியை நோக்கிய பயணக்குழு -
neethikkaanapayanam2013@gmail.com

https://www.facebook.com/Journey/Towards/Justice?fref=ts

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வன்முறைகளுக்கு இது தானா சட்டமும் நீதியும்?

கடந்த 13.05.2015 அன்று வித்யா சிவலோகநாதன் எனும் பாடசாலை மாணவியை கொடூரமான முறையில் பாலியல் வன் புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 9 நபர்களையும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் 30 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு கடந்த 15.06.2015 அன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இதன் பின்னர் இந்த 9 சந்தேக நபர்களும் குற்ற புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு கொழும்புக்கு அழைத்துச் செல்லபட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்திருந்தன. கடந்த 13.07.2015 அன்று இவ்வழக்கின் தவணை நடைபெற்ற போது, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் நீதி மன்றத்திற்கு அழைத்து வரப்படவில்லை, அத்துடன் இவர்களை மேலும் ஒரு மாத காலம் (12.08.2015 வரை) தடுத்து வைத்து விசாரிக்கும்படி நீதிபதியினால் உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஆகிய நாங்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்திருப்பது பற்றி மட்டுமல்ல பயங்கரவாதத்துடன் சம்பந்தமற்ற குற்றங்கள் தொடர்பாக நபர்களைத் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தல் பற்றியும் எமது ஆழ்ந்த அக்கறையை இத்தால் தெரிவிக்கின்றோம். இலங்கையில் அவசரகால ஒழுங்குவிதிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் நீண்டகால அமுல்படுத்தலால் சட்ட ரீதியான பாதுகாப்புக்கு முரணாக அமைகின்ற சட்டத்துக்கு புறம்பான நடைமுறைகளின் எழுச்சிக்கு காரணமாய் அமைந்துள்ளன.

இச்சூழ்நிலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது, தடுத்து வைத்திருத்தலின் சட்ட ரீதியான மீளாய்வை மறுத்தல், குற்றச் சாட்டுதல் இன்றி நீண்ட காலத்துக்கு தடுத்து வைத்தல், சித்திரவதை மற்றும் கொடுமையாக நடத்தப்படுவதன் விளைவாக குற்ற ஒப்புதலை வழங்கியுள்ளதாக தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்கள் தெரிவிக்கும் போது நிரூபிக்கும் பொறுப்புக்கள் மறுதலைப்பட்சமாக அமையும் சந்தர்ப்பம் உட்பட பல்வேறு மனித உரிமைகளை மீறுவதால் பாலியல் வல்லுறவு மற்றும் கொலை தொடர்பான குற்றச் செயலை விசாரணை செய்வதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தல் ஆழ்ந்த கரிசனைக்குரிய விடயமாகும். இவ்விடயங்கள் பல தடவைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு முன்வைத்திருக்கின்றது. அண்மையில் 2014 நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட அதன் இலங்கை தொடர்பான இறுதி அவதானிப்புகளிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு (Concluding Observations on Sri Lanka) இவ் விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

வித்யா சிவலோகநாதனின் வழக்கு போன்ற விடயங்களில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்ததைப் பயன்படுத்தி அச்சட்டத்தில் குறிப்பிடப்படாத குற்றங்களை விசாரித்து அதனை சாதாரணமாக்குதல் கவலைக்குரிய போக்காகும். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இலங்கையில் தற்போதுள்ள சட்ட முறைமைகளுக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டமானது பெண்களின் பாதுகாப்பையோ, உரிமையையோ உறுதிப்படுதும் என கடந்த 20 வருடங்களாக பெண்கள் உரிமைக்காக பணியாற்றி வருகின்ற பெண்கள் அமைப்பினரும் தனி நபர்களாகிய நாமும் நம்பவில்லை. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை நீக்கும்படி அழுத்திக் கோருவதுடன், மனித உரிமைகளுக்கு பாதகமான சட்டம் பெண்களைப் பாதுகாக்காது என்பதையே நாம் கூறுகின்றோம்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்கள் நியமனத்தில் தொடர்ந்தும் பெண்கள் புறக்கணிப்பு

இம்மாதம் நடைபெறவுள்ள இலங்கையின் 16 வதுபாராளுமன்றத் தேர்தலில் வழக்கம் போலவே பெண் வேட்பாளர்களின் தொகை மிகவும் குறைவாகவுள்ளது.

அரசியற் கட்சிகள் கணிசமானளவு பெண்கள் வேட்பாளர்களை நியமிக்க வேண்டுமென பல இலங்கைப் பெண்கள் அமைப்புக்கள் தொடர்கோரிக்கை விடுத்த காலகட்டத்தில் இக் கோரிக்கைகளை உதாசீனப்படுத்தும் வகையில் பெண்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். எனினும் இம்முறை பெண்கள் மாத்திரமே ஒரு அரசியற் கட்சியின் வேட்பாளர்களாக ஒரு மாவட்டத்தில் போட்டியிடும் சாதகத் தன்மையையும் நாம் அங்கீகரிக் கின்றோம். ஆயினும் பெண்களின் அரசியற் பங்கேற்பு அதிகரிப்பதற்கு இது மாத்திரம் போது மானதல்ல. அடையவேண்டிய இலக்கிற்கு நீண்ட தூரம் உள்ளது.

அரசியற் கட்சிகளிடம் பெண்கள் வேட்பாளர்களை ஏன் நியமிக்கவில்லை என்று கேட்டால் பெண்கள் மீதே குற்றம் சாட்டுகின்றனர். பெண்கள் முன் வருகின்றார்களில்லை எனக் கூறுகின்றனர். ஆனால் பெண்கள் முன் வருவதற்கான சூழலை ஏற்படுத்துவதும் அவர்களுக்கு ஆதரவளிப்பதும் சமத்துவத்திலும் சமூகநீதியிலும் நம்பிக்கையுள்ள அரசியற் கட்சிகளின் தார்மீகக் கடமையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாகப் போட்டியிடும் 368 வேட்பாளர்கள் மத்தியில் 19 பேரே பெண்களாவர். அதிலும் அரசியற் கட்சிகளின் வேட்பாளர்களாக 5 பெண்களே நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் இலங்கை தமிழர் மகாசபையில் 1 பெண்ணும், தமிழர்விடுதலைக் கூட்டணியில் 1 பெண்ணும், ஜனசெதபெரமுனவில் 2 பெண்களும், நவ சிஹல உறுமயவில் 1 பெண்ணும் போட்டியிடுகின்றனர். ஏனைய 14 பெண்களும் சுயேட்சைக் குழுக்களில் போட்டியிடுகின்றனர்.

பெண் வேட்பாளர்களை நியமிப்பதில் பிரதான அரசியற் கட்சிகள் உதாசீனம் காட்டியபோதிலும் அவற்றைமீறிப் போட்டியிட முன்வந்தமைக்காக இப் பெண்களை நாம் வரவேற்றுப் பாராட்டுகின்றோம்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,
மட்டக்களப்பு
03.08.2015





**சூரியா பெண்கள் அபிவிருத்த நிலையம்**
இல .55, லேடி மன்னிங் டிரைவ்,
மட்டக்களப்பு.
தொ. பேசி :065 - 22223297
மின்னஞ்சல் : suruyaw@slt.lk


முகவரி : ..............................................
..............................................
..............................................
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org